## இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், தஞ்சாவூர்.

**முன்னிலை: திரு.*S*.பாஸ்கரன்,B.Sc.,B.L.,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.**

2017 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 17 ம் நாள் வியாழக்கிழமை
திருவள்ளுவராண்டு 2048 ஆவணித்திங்கள் 1 ஆம் நாள்

**அசல் வழக்கு எண்.88/16ல் இடைநிலை மனு எண்.75/17**

1. எலிசபெத்மேரி
2. சுசிலாமேரி
3. அல்லிஸ்மேரி
4. சின்னம்மாள் **....மனுதாரர்கள்/ வாதிகள்**

-எதிர்-

ஆரோக்கியசாமி சுந்தரம்

**...எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி**

WEB COPY

இம்மனு என் முன்பாக 31.07.2017 இறுதி விசாரணைக்கு வரப்பெற்று மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.**M.பாலையன், M.A.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.**V. ஜீவகுமார்,B.Sc.,B.L.,** அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதங்களைக் கேட்டும், வழக்கின் முக்கிய ஆவணங்களைப் பரிசீலித்தும், மனுவை இதுநாள் வரை என் கவனமான பரிசீலனையில் வைத்திருந்தும், இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்

**உத்தரவு**

(1) மனுச்சொத்துக்களை பார்வையிட்டு அதன் பூஸ்துதிகள் குறித்தும், அவற்றில் இருக்கும் வெட்டப்பட்ட மரங்களின் வேர்களை பார்வையிட்டு மரங்களின் அளவுகள் குறித்தும், தோராய மதிப்பு குறித்தும் ஒரு அறிக்கை சமர்ப்பிக்க வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கேட்டு உரிமையியல் நடைமுறை சட்டம் வகுமுறை 26 விதி 9 ன்கீழ் மனுதாரர்கள் தரப்பில் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**(2) மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமாணப்பத்திரத்தின் சுருக்கம்:**

மனுதாரர்கள் அனைவரும் உடன்பிறந்த சகோதரிகள். இவ்வழக்கின் பிரதிவாதிகள் அவர்களின் உடன் பிறந்த சகோதரர்கள். தாவா சொத்துக்கள் தரப்பினர்களின் பெற்றோரான சந்தியாகு உடையார் மற்றும் நட்சத்திரம் அம்மாள் ஆகியோருக்கு பாத்தியமாக இருந்து அவர்கள் சொத்துக்கள் பொறுத்து எந்த ஏற்பாடும்

செய்துவைக்காமல் இறந்துவிட்டபடியால் மனுதாரர்கள் பாகப்பிரிவினை கேட்டு இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளனர். ஏற்கனவே இரண்டு பிரதிவாதிகளும் தோன்றாத்தரப்பினராகிவிட்ட நிலையில் தற்போது இந்த எதிர்மனுதாரர் அதனை ரத்து செய்ய நடவடிக்கை எடுத்து கட்சியாடிவருகிறார். வழக்கு நிலுவையில் இருந்தபோது எதிர்மனுதாரர் கடந்த 18.06.2017 அன்றே தாவா சொத்திலுள்ள யூக்கலிப்டஸ் முதலான அனைத்து மரங்களையும் வெட்டி அகற்றி மனுதாரர்களுக்கு இழப்பை ஏற்படுத்த முயற்சித்தார். மனுதாரர்கள் காவல் நிலையத்தில் புகார் கொடுத்துள்ளனர். அவர்கள் அதனை உரிமையியல் பிரச்சினை என்பதாக கூறினாலும், விசாரித்து மரங்கள் வெட்டப்படுவதை தடுப்பதாக உறுதியளித்தனர். அதனை நம்பி மனுதாரர்கள் இருந்துவிட்டனர். ஆனால், எதிர்மனுதாரர் மீண்டும் 20.06.2017 அன்று காலை 9 மணிக்கு ரௌடிகள் கூட்டத்தின் துணையுடன் ஆயுதங்களுடன் வந்து தாவா இடங்களில் உள்ள அனைத்து மரங்களையும் வெட்டி அகற்றிவிட்டனர். அவ்வாறு அகற்றப்பட்ட மரங்களின் மதிப்பு ரூ.7,50,000/- இருக்கும். அவற்றில் மனுதாரர்களுக்கும் உரிய பாகம் உள்ளது. மேற்படி மரங்களின் மதிப்பை அறியும்வகையிலும் அதற்கான பாகவீதத்தை அடையும் வகையிலும் இடத்தைப் பார்வையிட்டு பூஸ்துதிகளைக்குறித்து மரங்கள் சமீபத்தில் வெட்டப்பட்டுள்ளவா என்பதனையும், அவற்றின் அளவுகளையும், தோராய மதிப்பையும் குறித்து ஒரு விரிவான அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்யப்பட வேண்டும்.

WEB COPY

**<u>(3) எதிர்மனுதாரர்/1ஆம் பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:</u>**

இந்த எதிர்மனுதாரர் அசல் வழக்கில் விரிவான எதிர்வழக்குரையை தாக்கல் செய்துள்ளார். வழக்கில் சேர்க்கப்படாத புல எண்கள் 202/6C மற்றும் 201/10 ஆகியவை இம்மனுவில் சேர்க்கப்பட்டுள்ளன. சொத்துக்கள் தகப்பனாரின் உயில் மூலம் தனக்கு கிடைத்துள்ளதாக இந்த எதிர்மனுதாரர் எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ளார். மனுதாரர்கள் சாட்சியம் சேகரிப்பதற்காக வழக்கறிஞர் ஆணையர் நியமனம் கோரமுடியாது. இம்மனு சாட்சியம் சேகரிப்பதற்கான ஒரு முயற்சியே. ஆகவே, இம்மனு தள்ளுபடி செய்யப்பட வேண்டும்.

**<u>(4) இம்மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சினை யாதெனில்:</u>**

**"இம்மனு அனுமதிக்கத்தக்கதா?" என்பதேயாகும்.**

**<u>(5) பிரச்சினை:</u>**

தாவா சொத்துக்களில் உள்ள அனைத்து மரங்களையும் எதிர்மனுதாரர் வெட்டி அகற்றிவிட்டதாகவும், அதுபற்றி காவல்துறையில் புகார்கள் கொடுத்துள்ளதாகவும்,

தற்போது வெட்டி அகற்றப்பட்ட மரங்களின் அடிவேர்கள் தாவா சொத்துக்களில் இருப்பதாகவும், ஆகவே, வழக்கறிஞர் ஆணையர் அவற்றை உடனடியாக பார்வையிட்டு, வெட்டப்பட்ட மரங்களின் எண்ணிக்கை மற்றும் தோராய மதிப்பு பற்றி அறிக்கை தாக்கல் செய்யப்படாவிடில் மரங்களுக்கான மதிப்பு தங்களுக்கு கிடைக்காமல் போய்விடும் என்பதாகவும், மனுதாரர்கள் தரப்பில் வாதிடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில், இம்மனு சாட்சியம் சேகரிப்பதற்கான ஒரு யுக்தி என்பதாக வாதிடப்பட்டுள்ளது. மனுதாரர்கள் தாவா சொத்துக்கள் பாகம் பிரிபடாத கூட்டுக்குடும்ப சொத்துக்கள் என்பதாகவும், அதில் தங்களுக்கு 4/6 பாகம் கிடைக்க வேண்டும் எனவும், பாகப்பிரிவினைக்காக அசல் வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். எதிர்மனுதாரர், தாவா சொத்துக்கள் தன் பெற்றோர் எழுதிவைத்த உயில்கள் மூலம் தனக்கு கிடைத்து, தன் அனுபோகத்தில் .இருப்பதாகவும், ஒரு சொத்து தன் சுயார்ஜித சொத்து எனவும், எதிர்கட்சியாடுகிறார். சொத்துக்கள் பாகப்பிரிவினைக்கு உகந்த சொத்துக்களா அல்லது முதல் பிரதிவாதியான இந்த எதிர்மனுதாரருக்கு அவர் கட்சியின்படியான தனிப்பட்ட சொத்துக்களா என்பது அசல் வழக்கு விசாரணையிலேயே முடிவு செய்யப்பட வேண்டும். சொத்துக்கள் பாகப்பிரிவினைக்கு கட்டுப்பட்ட சொத்துக்கள் என முடிவு செய்யுங்கால் சொத்துக்களில் நின்ற மரங்களிலும் மனுதாரர்களுக்கு பாகம் கிடைக்கக்கூடியது. மனுதாரர்கள் தரப்பில் வழக்கு நிலுவையில் இருக்கும்போது எதிர்மனுதாரரால் மரங்கள் வெட்டப்படுவது குறித்து பூதலூர் காவல் நிலையத்தில் புகார்கள் கொடுக்கப்பட்டன என்பதற்கு ஆதரவாக 9.6.2017 மற்றும் 18.6.2017 தேதியிட்ட புகார்களின் நகல்களும், 18.6.2017 அன்று கொடுக்கப்பட்ட புகாருக்கு காவல்நிலையத்தினர் கொடுத்த ரசீதும் ஆவணங்களாக தாக்கல் செய்யப்பட்டுள்ளன. வழக்கு நிலுவையில் இருக்கும்போதே மரங்கள் அனைத்தையும் எதிர்மனுதாரர் வெட்டி அகற்றிவிட்டார் என்பது மனுதாரர்களின் கூற்று. தற்போது வெட்டப்பட்ட மரங்களின் வேர்கள் மட்டுமே எஞ்சியுள்ளன என்பதாக அவர்கள் கூறுகின்றனர். அவ்வாறு வேர்கள் எஞ்சியுள்ளன என்பதை வாய்மொழி சாட்சியம் மூலமாக ருசுப்படுத்துவது மிகவும் சிரமமான ஒரு காரியமாகும். மேலும், வழக்கு விசாரணைக்கு வரும்போது மேற்படி வேர்களும் அகற்றப்பட்டுவிட்டால் தாவா சொத்துக்களில் மரங்கள் நின்றன என்ற விபரமே நீதிமன்றத்திற்கு தெரியவராமல் போய்விடும். ஆகவே, மரங்கள் ஏதேனும் இருந்து, அவை வெட்டப்பட்டிருப்பின், அதனை பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய வழக்கறிஞர் ஆணையர் நியமனம் செய்வது சாட்சியம் சேகரிக்கும் முயற்சியாகாது. மாறாக, சாட்சியம் அழியும் நிகழ்வை தடுக்கக்கூடிய நடவடிக்கையேயாகும். மனுதாரர்கள் இம்மனுவில் வழக்கறிஞர் ஆணையர் வெட்டப்பட்ட மரங்களின் தோராய மதிப்பு குறித்தும் அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும் எனவும் ஒரு கோரிக்கையை முன்வைத்துள்ளார்கள். அதற்கு வழக்கறிஞர் ஆணையர் தகுதியான ஒரு நபரின் உதவியைப் பெற்றுக்கொள்ள வேண்டியதும் அவசியமாகும். ஆகவே, வழக்கறிஞர் ஆணையர் மரங்களின் மதிப்பை அளவிடும் ஒரு தகுதியான நபரின் உதவியுடன் தாவா இடங்களைப் பார்வையிட்டு அதில் மரங்கள்

WEB COPY

சமீபத்தில் வெட்டப்பட்டுள்ளனவா என்பதுகுறித்தும், அவற்றின் தோராய மதிப்பு குறித்தும் ஒரு அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடுவதே வழக்கின் சூழ்நிலைகளுக்கு உசிதமானதாக தோன்றுகிறது. ஆகவே, அவ்வாறே மேற்கண்ட பிரச்சினைக்கு தீர்வு காணப்படுகிறது.

முடிவாக, இம்மனு அனுமதிக்கப்பட்டு, திரு.M.S.செந்தில்குமார், B.A.L.L.B அவர்கள் இவ்வழக்கில் வழக்கறிஞர் ஆணையராக நியமனம் செய்யப்பட்டு, அவர் இருதரப்பினருக்கும் உரிய முறையில் அறிவிப்புகள் கொடுத்துவிட்டு தாவா சொத்துக்களைப் பார்வையிட்டு, அவற்றில் சமீபத்தில் மரங்கள் ஏதேனும் வெட்டி அகற்றப்பட்டுள்ளனவா என்பது குறித்தும், அங்கு வெட்டப்பட்ட மரங்களின் வேர்கள் ஏதேனும் எஞ்சியிருப்பின் அதுகுறித்தும், வெட்டப்பட்ட மரங்களின் மதிப்பை நிர்ணயிக்கும் தகுதியான ஒரு நபரின் உதவியுடன் அவற்றின் தோராய மதிப்பை நிர்ணயித்தும் ஒரு விரிவான அறிக்கையை இந்நீதிமன்றத்தில் எதிர்வரும் 1.9.2017 க்குள் தாக்கல் செய்ய வேண்டும் என உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர் ஆணையரின் ஊதியமாக ரூ.5000 நிர்ணயம் செய்யப்பட்டு அதனை மனுதாரர்கள் நேரடியாக அவருக்கு செலுத்தி விடவேண்டும் எனவும் உத்தரவிடப்படுகிறது. மனுவை 1.9.2017 அன்று அழைக்கவும்.

WEB COPY

என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு விரிவாக்கம் செய்யப்பட்டு, என்னால் பிழைதிருத்தம் செய்யப்பட்டு, **2017ஆம் ஆண்டு ஆகஸ்டுத்திங்கள் 17ஆம் நாள்** இந்நீதிமன்றத்தில் உத்தரவு அவையறிய பகரப்பட்டது.

(ஒ-ம்) ***S*. பாஸ்கரன்**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.
தஞ்சாவூர்

**மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் : இல்லை**

(ஒ-ம்) ***S*. பாஸ்கரன்**
இரண்டாவது கூடுதல் மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி.
தஞ்சாவூர்

**வரைவு/சீரான உத்தரவு**
**அசல் வழக்கு எண்.88/16ல்**
**இடைநிலை மனு எண்.75/17**
**நாள்: 17.08.2017**

WEB COPY